புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 53. TML1193 - நற்றிணையில் பெண்களின் நிலை

முனைவர் ம.சரளாதேவி,
தலைவர் மற்றும் உதவிப்பேராசிரியர் (சுழற்சி–2),
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி(தன்னாட்சி), திருப்பத்தூர்.

## முன்னுரை

*பெண்களைத் தாய், அம்மா, அன்னை, மாதா என்று அன்போடு அழைக்கின்றார்கள். தாய்நாடு, தாய்மொழி, அம்மையே அப்பா, அன்னையும் பிதாவும், மாதா பிதா போன்ற சொற்களின் அடிப்படையில் பெண்மைக்கு முதலிடம் தந்துள்ளனர். பெண் என்பவள் அன்பின் வடிவம், துணிவின் ஊற்று, தியாகத்தின் சிகரம், கடமையின் உறைவிடம், பொறுமையின் இருப்பிடம், இல்லத்தின் அரசி என்று பல்வேறு நிலையில் புகழ்கின்றனர் இத்தகைய சிறப்பு பெற்ற பெண்களின் நிலை சங்க இலக்கிய நூலான நற்றிணையில் எப்படி வெளிப்படுகின்றது என்பதை ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.*

## பெண்ணியம் – விளக்கம்

*அடிமைப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டிருந்த பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் உருவானதே பெண்ணியம்.*

*குடும்பத்திலும், வேலை செய்யுமிடத்திலும் பெண்கள் தாழ்த்தப்படுவதும், சுரண்டப்படுவதுமாக உள்ளனர். இவற்றைப்பற்றிய உணர்வும், இச்சூழலை மாற்ற வேண்டி, பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வு நிலையுடைய செயல்பாடுகளுமே பெண்ணியம். (காவ்யா சண்முக சுந்தரம்(தொ.ஆ), பெண்ணியம், ப.3)*

*அடக்கம், பொறுமை, தியாகம், பிறர்நலம், இரக்கம், அழகு,, அறிவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும் என்பர். (திரு.வி.க. பெண்ணின் பெருமை, ப.12)*

*இத்தகைய கருத்துகளின் அடிப்படையில் பெண்களின் வாழ்க்கைமுறை எப்படி இருந்தது என்பது நற்றிணை வழி ஆராயப்படுகிறது.*

## தொல்காப்பியத்தில் பெண்களின் நிலை

தொல்காப்பியத்தில் பெண்களின் நிலை குறித்து இடம்பெற்றுள்ளது. தொல்காப்பியம் முதற்கொண்டு அதற்குப்பின்னர் தோன்றிய இலக்கண நூல்களை இயற்றியவர்களில் பெரும்பான்மை ஆண்கள் பெயர்களே இடம்பெற்றுள்ளன. முற்காலத்தில் பெண்கள் படிப்பறிவு மட்டுமல்லாமல் பல நிலைகளில் ஒன்றும் அறியாதவர்களாகவே இருந்துள்ளனர். இதனைத் தொல்காப்பியம் சுட்டிக்காட்டியுள்ளது.

*முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை” (தொல்.சொல்.6)*

ஓதல், பகை, தூது, காவல், பொருள் இவற்றின் காரணமாக ஆண்மகன் கடல் கடந்து செல்லும்போது பெண்மகள் அவனுடன் செல்லும் வழக்கம் தொல்காப்பியர் காலத்தில் இல்லை என்பதை அறியமுடிகின்றது

*ஆனால் காதல் புரிந்து ஒருவனைக் கைப்பிடித்து வாழ உரிமை பெற்றிருந்தாள். ஒத்த அன்பு, வயது, கல்வி, செல்வம், குடிப்பிறப்பு எனப் பத்துப் பொருத்தங்கள் உடைய ஆணும், பெண்ணும் காதலித்துத் திருமணம் செய்து வாழ்ந்தனர் எனக் காட்டுகின்றது தொல்காப்பியம்.*

## சங்க காலத்தில் பெண்களின் நிலை

*சங்க காலத்தில் பெண் ஆடி, பாடி விளையாடி மகிழ்ந்தாள். அவளை வீட்டுக்குள் யாரும் பூட்டி வைக்கவில்லை என்பது சங்க இலக்கியங்கள் காட்டும் உண்மை. வழிபாட்டிலும், கல்வியிலும், கலைகளிலும்*

*கூட பெண்கள் சிறப்பிடம் பெற்றிருந்தனர். சங்க காலத்தில் பெண்கள் வாழ்வில் காதல் செய்து கணவனைத் தேரந்தெடுக்கும் நிலையும் உரிமையும் இருந்தது. சங்க காலத்தில் முப்பதிற்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் கவிதை பாடியுள்ளனர். ஔவை என்ற பெண்பாற் புலவர் இன்றும் சரித்திரப் புகழோடு பேசப்படுகின்றார்.*

*காதலனைத் தேரும் உரிமை பெற்றிருந்த பெண் ஆடிப்பாடி மகிழ்ந்த மகிழ்வுகள் நற்றிணை, குறுந்தொகைப் பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

*ஆண்களுக்கு நினைத்த இடமெல்லாம் சுற்றித்திரியும் உரிமை உண்டு. ஆனால் பெண்களுக்கு இல்லை. எனவே தோழி தலைவியின் நிழல்போல் தொடர்ந்து காப்பாளராகத் திகழ்கிறாள்.*

''காப்பும் பூண்டிசின் கடையும் போகலை
பேதையல்லை மேரையங் குறுமகள்'' (அகம்.7)

*என்று அகநானூறு கூறுகின்றது. தலைவி இரவும் பகலும் தாய், தந்தையின் கடுங்காவலுக்கு உட்படுவது தமிழர் நாகரிகம். பெற்றோர் இசைவு பெற்றுத் தலைவி வெளியில் சென்றாலும் தோழியும் விடாது உடன் செல்லும் வகையிலே இலக்கியங்கள் அமைந்துள்ளன.*

**நாணம்**

*சங்க காலப் பெண்கள் மனதளவில் பெரும் அழுத்தங்கள் எதுவும் இல்லாத மிகவும் எளிமையான வாழ்க்கையே அப்போது நிலவியது. அச்சம் , மடம், நாணம், பயிர்ப்பு என்பவையே பெண்ணின் குணமாகக் கூறப்பட்டாலும்*

''உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று'' (தொல்.களவி.23)

*என்ற தொல்காப்பியப் பாடலுக்கு ஏற்றவகையில் உயிரைவிடவும், நாணத்தை விடவும் கற்பே பெரிது என நெறி வழுவாது வாழ்ந்த சங்க காலத்துப் பெண்களின் வாழ்க்கை கவனிக்கத்தக்கது.*

''உயிரினும் சிறந்த நாணும் நனிமறந்து
உரைத்தல் உய்ந் தனனே தோழி!'' (நற்.17)

*சங்க காலத்தில் தலைவனுக்காக உயிரினும் சிறந்த நாணத்தை மறந்துள்ளனர் என்ற நற்றிணைப் பாடல் தொல்காப்பியத்துடன் பொருந்தி அமைந்துள்ளது.*

*இத்தகைய சூழலை மாற்றி*

''கற்புநிலை என்று சொல்ல வந்தால்
ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவில் வைப்போம்''

*என்ற பெண்ணியச் சிந்தனைக்கான புரட்சி வித்துகள் பாரதியாரால் கூறப்பட்டன.*

**நம்பிக்கை**

*பெண்கள் எதையும் உடனே உண்மை என்று நம்பிவிடும் தன்மை கொண்டவர்கள். சரியா, தவறா என்று ஆராய்ந்து பார்க்கும் வல்லமை குறைந்தவர்கள். அதனால் விரைவில் ஏமாற்றம் அடைந்து விடுகின்றனர். இதனை எடுத்துரைக்கும் வகையில்*

''கல்லக வெற்பன் சொல்லின் தேறி
யாம்எம் நலன்இழந் தனனே'' (நற்.36)

*தலைவன் உன்னைப் பிரிய மாட்டேன் என்று அவன் சொன்ன சொல்லை உண்மையென நம்பி என் நலத்தை இழந்து விட்டேன் என்று தலைவி கூறுகின்றாள்.*

**வீட்டில் அடைபடுதல்**

*சுதந்திரமாகச் சுற்றித் திரியும் தலைவி, பெற்றோரின் சந்தேகத்திற்கு உட்பட்டால் அவள் நிலை முற்றிலும் மாறிவிடும். தலைவியின் நிலையை அறியும் பெற்றோர் தலைவியை வீட்டிற்கு வெளியில் விடாமல் வீட்டில் அடைத்து வைக்கும் நிலையும் இலக்கியங்களில் காணப்படுகின்றன.*

''இளையோர் இல்லிடத்து இற்செறிந் திருத்தல்
அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம்'' (நற்.68)

*இளமகளிர் தம்முடைய தோழியர் கூட்டத்தோடு ஓரை (பாவை செய்து விளையாடும் விளையாட்டு) ஆடாமல் வீட்டின் கண் இற்செறிக்கப் பட்டமை அறம் ஆகாது என்று தோழி கூறுகின்றாள்.*

**அழகுபடுத்துதல்**

*திருமணமான பின்னர், தலைவி தலைவன் தன்னுடன் இல்லாத காலங்களில் தன்னை அழங்கரித்துக் கொள்ளும் தன்மை அற்றவளாகக் காணப்படுகின்றாள். தலைவன் வருகின்றான் என்று தெரிந்த பின்பே உள்ளம் மகிழ தன்னை அழகுபடுத்திக் கொள்வாள்.*

''ஏகுமின் என்ற இளையர் வல்லே
இல்புக்கு அறியுந ராக மெல்லென
மண்ணாக் கூந்தல் மாசறக் கழீஇ'' (நற்.42)

*நாம் தேரில் கட்டிய மணி ஒலிகளை ஒலிக்காது செய்ததால் தலைவி நம் தேர் வருவதை அறியவில்லை. அதனால் இளைஞர்கள் முன் கூட்டி சென்று எம் வரவை அறிவித்தனர். உடனே அவள் இதுவரை கழுவாது இருந்த கூந்தலை அழுக்க நீங்க நன்றாகக் கழுவிச் சிலமலர்களைச் சூடிக் கூந்தலைப் பலவாக முடித்திருந்தாள் என்று கூறுவதிலிருந்து பெண்கள் தன் கணவன் உடன் இருத்தலையே பெரிதும் விரும்பி மகிழ்வர் என்பதை எடுத்துரைக்கின்றது.*

**அஞ்சுதல்**

*பெண்கள் தாம் வாழும் காலங்களில் அஞ்சியே வாழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.*

''யான் யாய் அஞ்சுவல் என்னினும்'' (நற்.72)
''தம்மொடும் அஞ்சும் நம்இவண் ஒழியச்
செல்ப என்ப தாமே'' (நற்.73)

*துன்பம் தருகின்ற மாலைப் பொழுதில் தலைவரோடு இருப்பினும் நாம் அஞ்சுவோம். இந்நிலையில் நாம் இங்குத் தனியே தங்குமாறு நம்மை விட்டு விட்டுச் சென்ற தலைவனை நினைத்து உள்ளம் வருந்துகின்றது.*

*அஞ்சி வாழும் பெண்கள் அஞ்சாத நிலையிலும் வாழ்ந்துள்ளனர்.*

''சாதல் அஞ்சேன் அஞ்சுவல், சாவின்
பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின்
மறக்குவேன் கொல்என் காதலன் எனவே '' (நற்.397)

*நான் இறப்பதற்கு அஞ்சவில்லை. இறந்துபோனால் அடுத்த பிறப்பில் வேறுபட்டு அமைந்தால் என் காதலனை மறந்துவிட நேருமோ என்றே அஞ்சுகின்றேன் என்கிறாள்.*

''அச்சமில்லை அச்சமில்லை
அச்சம் என்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சம் என்பதில்லையே''

*என்ற பாரதியின் வீர முழக்கத்தை மனதில் ஏற்று செயல்படுவாள் என்பது உறுதி.*

**கண் கலங்குதல்**

*பெண்கள் பெரும்பாலும் தன் நிலையை மற்றவருக்கு அதிகம் வெளிப்படுத்துவதில்லை. அப்படி வெளிப்படுத்தும் சூழலில் அழுகை ஒன்றின் வாயிலாகத் தன் துன்பத்தை வெளிப்படுத்துகின்றாள்.*

''எழாஅ ஆகலின் எழில்நலந் தொலைய
அழாஅ தீமோ நொதுமலர் தலையே!'' (நற்.13)
''அழுதனள் உறையும் அம்மா அரிவை'' (நற்.81)

*கிளிகள் தினணக் கதிர்களைக் கவர்ந்து செல்லும். அதனால் திணைக் கதிர்கள் அழிகின்றன. கிளியை ஓட்ட வேண்டிய நீயும் அவ்விடத்தில் இருந்து எழவில்லை. உன் அழகிய நலம் கெடும்படியாக அயலார் இருக்கும் இவ்விடத்தில் அழாமல் இருப்பாயாக! என்று தோழி கூறுகின்றாள்.*

**பொய் கூறுதல்**

*தலைவி தன் பெற்றோரிடம் பொய் பேசாதவளாகவே வளர்ந்து வந்துள்ளாள். ஆனால் தலைவனுக்காகப் பொய் சொல்லும் நிலைக்கு மாறி விடுகின்றாள்.*

''சாந்த ஞெகிழி காட்டி
ஈங்கு ஆயினவால் என்றிசின் யானே'' (நற்.55)

*அடுப்பில் இட்ட சந்தன விறகினை எடுத்துக்காட்டி தாயே இவ்விறகை அடுப்பில் இடுவதால் இதன் மீது இருந்த வண்டுகள் யாவும் இவள் தோளை மொய்க்கின்றன என்று மறைத்துக் கூறினேன். இங்ஙனம் எத்தனை நாள் நம் களவினை மறைத்துப் பொய் கூறுதலும் இயலும். தலைவிக்கு உதவும் வகையில் தோழியும் பொய் சொல்லும் நிலை இலக்கியங்களில் காணப்படுகின்றன.*

**மருந்தானவள்**

*பெண் என்பவள் பிறர் மனம் மற்றும் உடலில் தோன்றும் நோய்க்கு மருந்தாக விளங்குபவள். தன் மகிழ்ச்சி பாராமல் பிறர் நலனில் மகிழ்ச்சி அடைபவள் என்பதன் அடிப்படையில் நற்றிணைப் பாடல் அமைந்துள்ளது.*

''தைஇத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோள் குறுமகள் அல்லது
''மருந்துபிறிது இல்லையான் உற்ற நோய்க்கே'' (நற்.80)

*தைத்திங்களில் குளிர்ந்த நீரில் ஆடி நோன்பு மேற் கொண்டாள். அந்நோன்பின் பயனாக என்னைப் பெறுவதற்காக நீராடியவளும் பெருத்த தோளை உடைய இளைய மகளான தலைவியே! யான் உற்ற நோய்க்கு மருந்தாக அவள் அமைவாள். அவள் அல்லாமல் வேறு மருந்து இல்லை.*

**விருந்தோம்பல்**

*சங்க காலம் முதல் இக்காலம் வரை விருந்தோம்பல் என்பது தமிழரின் பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாக விளங்குகின்றது.*

''விருந்துஎவன் செய்கோ தோழி!'' (நற்.112)
''நல்மனை நனிவிருந்து அயரும்
கைதூ வின்மையின் எய்தா மாறே'' (நற்.280)

*தலைவன் வருகையை உணர்த்தி நிற்கும் மழைக்கு நாம் என்ன விருந்து செய்வோம்? என்பதன் மூலம் மனிதர்களுக்கு மட்டுமல்லாது இயற்கைக்கு விருந்து படைக்கும் தன்மை கொண்டவர்கள் தமிழ்ப் பெண்கள் என்பதை எடுத்துரைக்கின்றது.*

''விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று'' (குறள்.82)

*என்கிறது திருக்குறள்.*

**பரத்தை நிலை**

*பரத்தை குறித்து சங்க இலக்கியம் எடுத்துரைக்கின்றது. பெண்கள் ஒழுக்கம் உடையவர்களாக ஒரு பக்கம் பேசப்படும் நிலையில் ஒழுக்கத்தில் குன்றி இருந்தனர் என்றும் மறுபக்கம் எடுத்துரைக்கின்றது.*

''பூப்போல் உண்கண் பெயர்ப்ப நோக்கிச்
சென்றனள் வாழிய, மடந்தை!'' (நற்.20)

*கண்ணால் அங்குமிங்கும் பார்த்தபடி இளம்பருவம் உடைய பரத்தையை நான் கண்டேன். அவள் உன்னோடு நீடுவாழ்வாளாக! என்று நற்றிணைப்பாடல் அமைந்துள்ளது.*

*இதன் அடிப்படையில்*

"தையல் சொல் கேளேல்"
"சேலை கட்டிய மாதரை நம்பாதே"
"பொம்பளசிரிச்சாபோச்சு"
"பெண் புத்தி பின் புத்தி"
"பெண்டிற்கழகு எதிர் பேசாமை"

*போன்ற பெண்கள் பற்றிய பழமொழிகளும் பெண்ணைக் கேவலமாகவே சித்தரிக்கின்றன.*

"பெண்ணை அடிச்சு வளர்க்கனும்
முருங்கையை ஒடிச்சு வளர்க்கனும்"

*என்பன போன்ற கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன. நேற்றிருந்த நிலை இன்றில்லை. இன்றிருக்கும் நிலை நாளை நிச்சயம் மாறும் என்பது உறுதி. இந்நிலை தற்போது மாற்றம் பெற்று வருகின்றது என்பது மறுக்க முடியாத உண்மை.*

**முடிவாக**

*பெண் என்பவள் உலகின் உயிர்நாடி, உலகினை இயக்கும் சக்தி. பழந்திராவிட நாகரீகத்தின் தாய் தெய்வ வழிபாட்டின் அடிப்படையில் பூமித்தாய் என்று வணங்கினர்.*

**நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும்**

*திமிர்ந்த ஞானச் செருக்கும் உள்ளவர்களாக இக்காலத்தில் பெண்கள் பல்வேறு துறைகளில் தடம் பதித்து வருகின்றனர்.*

*சங்க காலத்தில் இருந்த நிலை மாற்றம் பெற்று பல்வேறு நிலைகளில் பெண்கள் சாதனை படைக்கும் சூழல் இக்காலத்தில் உருவாகியுள்ளதைக் காணமுடிகின்றது.*

*ஆனால் சில நிலைப்பாடுகள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்றால் அதன் அடிப்படையில் வாழ்வதே பெண்மைக்குச் சிறப்பு என்பது அனைவரும் அறிந்த உண்மை.*

**துணைநின்ற நூல்கள்**

1. ச.வே.சுப்பிரமணியன், சங்க இலக்கியம், நற்றிணை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 2010.
2. ச.வே.சுப்பிரமணியன், சங்க இலக்கியம், அகநானூறு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 2010.
3. ச.வே.சுப்பிரமணியன், தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.2019.
4. காவ்யா சண்முகசுந்தரம் (தொ.ஆ), பெண்ணியக் கட்டுரைகள், காவ்யா வெளியீடு, சென்னை.
5. திரு.வி.க. பெண்ணின் பெருமை, திருமகள் நிலையம், சென்னை.
6. கோ.பெரியண்ணன், திருக்குறள், வனிதா பதிப்பகம், சென்னை. 2019
7. பெண்கள் மாநாடு, இ.மா.கோ.யாதவர் மகளிர் கல்லூரி, மதுரை.
8. சி.வாசுகி, சி.அயோத்தி, பன்முக நோக்கில் பெண்ணியப் பதிவுகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2007.